# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:100 தேதி:-07.04.2016

## DIRECTOR (HR) உடன் சந்திப்பு

அன்பார்ந்ததோழர்களே,

நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் தொடர்பாக BSNL நிர்வாகத்திற்கும், BSNL ஊழியர் சங்கத்திற்கும் இடையே இன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பாக பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, அமைப்பு செயலாளர் தோழர் R.S.சவுகான் மற்றும் உதவி பொருளாளர் தோழர் குல்தீப் சிங் ஆகியோர் பங்கேற்றனர். BSNL நிர்வாகத்தின் சார்பாக DIRECTOR(HR) திருமிகு சுஜாதாரே திரு D.சக்கரவர்த்தி GM(PERS) திருமிகு மது அரோரா GM(ESTT), திரு A.M.குப்தா GM(SR) திரு ஷியோ சங்கர் பிரசாத் DGM(ESTT) மற்றும் திரு ராம் ஷகால் Additional GM(SR) ஆகியோர் பங்கேற்றனர். NFTE சங்கத்துடன் கூட்டு சேர்ந்துக் கொண்டு ஊழியர்களுக்கு இரண்டு இலக்கத்தில் PLI வழங்குவது என்ற முடிவை BSNL CMD ஊழியர்களின் மீது திணிக்க முயற்சித்ததுதான் தற்போது ஏற்பட்டிருக்கும் சிக்கலுக்கு காரணம் என BSNL ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டினார்கள். மேலும், இரண்டு இலக்க PLIஐ இறுதி செய்ய வேண்டும் என்கிற விஷயத்தை உள்ளுக்குள் வைத்து (HIDDEN AGENDA) ஒரு நாள் அவகாசத்தில் PLI கமிட்டியின் அவசரக்கூட்டத்தை BSNL நிர்வாகம் கூட்டியுள்ளது என்றும் குற்றம் சாட்டினார்கள். 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு முடியும் வரை இந்த பிரச்சனையில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது என்று DIRECTOR(HR) உறுதி அளித்தார். எப்படி இருப்பினும், ஊழியர்களுக்கு நியாயமான குறைந்தபட்ச PLI வழங்க வேண்டும் என UNITED FORUM வற்புறுத்துகிறது என்றும், அந்த பிரச்சனையை தீர்வு காண்பது நிர்வாகத்தின் கடமை என்றும் BSNL ஊழியர் சங்கம் உறுதியாக கூறியது. மேலும் 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு முடியும் வரை மேற்கொண்டு எந்த ஒரு போராட்டமும் இருக்காது என BSNL ஊழியர் சங்கம் உறுதி கூறியது. எனினும் 08.04.2016 முதல் நிர்வாகத்திற்கு BSNL ஊழியர் சங்கம் கொடுத்து வந்த ஒத்துழைப்பை முழுமையாக விளக்கிக் கொள்கிறது என்றும் BSNL ஊழியர் சங்கம் உறுதியாக தெரிவித்துள்ளது.

**2013 JTO LICE தேர்வு முடிவுகள் பரிசீலனை**:- இந்தக் கூட்டத்தில் 2013 JTO LICE தேர்வு முடிவுகள் பரிசீலனை செய்வதற்காக கார்ப்பரேட் அலுவலகம் மாநிலங்களுக்கு எழுதிய கடிதம் தெளிவில்லாமல் உள்ளது என்று பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு சுட்டிக்காடினார். தவறான கேள்விகள், OUT OF SYLLABUS கேள்விகள், தவறான KEY உள்ளிட்ட அனைத்திற்கும் கூடுதல் மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என தெளிவான வழிகாட்டுதல் வழங்க வேண்டும் என பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். DIRECTOR(HR) தேவையானவற்றை செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

**JAO LICE தேர்வு எழுத 55 என வயது வரம்பை உயர்த்த வேண்டும்**:- JAO LICE தேர்வு எழுத 55 வயது என வயது வரம்பை உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே DIRECTOR (HR) அவரக்ளுக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளது. இந்தக் கூட்டத்திலும் அந்தக் கோரிக்கையினை முன் வைத்து நமது பொது செயலாளர் DIRECTOR (HR) அவர்கள் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**